# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–2220 037
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).
************

முறையீட்டு மனு எண்: 0541/2016/பேரு.

ஆணை எண்: 146/2017

நாள்: 07/06/2017

திரு. V. குட்டிராஜன்,
பேரூராட்சி துணைத் தலைவர்,
பம்மத்து மூலை,
மணவாளக் குறிச்சி – 629 252. - முறையீட்டு மனுதாரர்

பேரூராட்சி முன்னாள் தலைவர்,
மணவாளக்குறிச்சி பேரூராட்சி,
மணவாளக்குறிச்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.
மற்றும் பிறர். - எதிர் மனுதாரர்கள்

கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக்குறிச்சி பேரூராட்சியைச் சேர்ந்த திரு. V. குட்டிராஜன் என்பவரது 12.08.2014 நாளிட்ட முறையீட்டு மனு 03.06.2016 நாளிட்ட பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் வாயிலாக 09.06.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 0541/பேரூ/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக் குறிச்சி பேரூராட்சியைச் சேர்ந்த திரு. V. குட்டிராஜன் என்பவரது 12.08.2014 நாளிட்ட முறையீட்டு மனுவில் மணவாளக்குறிச்சி பேரூராட்சியில் "2011-ஆம் ஆண்டு குடிநீர் இணைப்பு வேண்டி 1500 பேர் விண்ணப்பித்து பதிவு

செய்யப்பட்டுள்ளதாகவும், அதிகார பூர்வமற்ற தொகையாக ஒரு நபருக்கு ரூ.10,000/- என பேரூராட்சி முன்னாள் தலைவி திருமதி. ஜோசப்பின் ரீட்டா முன்னாள் தலைவர் திரு. ராஜசேகர், செயல் அலுவலர், பஞ்சாயத்து பணியாளர்கள் மற்றும் பிளம்பிங் ஓர்க்கர் திரு. சுரேஷ் (காண்ட்ராக்டர்) இவர்களின் கூட்டு முயற்சியால் நிர்ணயிக்கப்பட்டு 1250 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு, 750 இணைப்புகளுக்கு இணைப்பு என் மற்றும் ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றும், சென்டேஜ் கட்டணம் ரூ.523/-ஐ ஒரே கட்டணமாக வசூலித்து, இழப்பீடு செய்ய வழி செய்து, ஊழல் மற்றும் மோசடி செய்து முன்னாள் தலைவி, பல லட்சங்கள் பெறுமான சொத்துக்கள் வாங்கி குவித்துள்ளார் என்றும், இது பற்றி புகார், பேரூராட்சியில் தெரிவித்தால் குடிநீர் இணைப்பை துண்டித்து விடுவதாக மிரட்டி வருவதாகவும் 500 இணைப்புகளுக்கு இணைப்பு என் மற்றும் ரூ.10,000/-க்கான ரசீது வழங்கவும், குடிநீர் துண்டிக்காமல் இருக்க துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும், பேரூராட்சி முன்னாள் தலைவி திருமதி. ஜோசப்பின் ரீட்டா, மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கவும்" மனுவில் முறையிட்டு மனுதாரர் வேண்டியுள்ளார்.

2) இம்முறைமன்ற நடுவத்தின் அறிவிப்பாணை எண்.0541/பேரு./2016 வாயிலாக மனுதாரின் முறையீட்டு மனு மீது செயல் அலுவலரின் விளக்க அறிக்கை கோரப்பட்டது. செயல் அலுவலர் தனது 08.02.2017 நாளிட்ட விளக்க அறிக்கையில் மணவாளக்குறிச்சி பேரூராட்சியில் குடிநீர் இணைப்புக்கான உரிய முன் வைப்புத் தொகைகள், சென்டேஜ் கட்டணம் உள்ளிட்ட கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு 1131 வீட்டுக் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், முறையற்ற குடிநீர் இணைப்புகள் குறித்து ஆய்வு செய்து, 23 முறையற்ற குடிநீர் இணைப்புகள் கண்டறியப்பட்டு உரிய தொகைகள் வசூல் செய்து முறைப்படுத்தப்பட்டுள்ளன என்றும், தற்போது 2015 முதல் உடனுக்குடன் மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருவதாகவும் மீட்டர் இணைப்புகளில் பொருத்தப்பட்டு வருவதாகவும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இதற்கு ஆதாரமாக முறைபடுத்தப்பட்ட 23 நபர்களின் பெயர் விவரத்தினையும் குடிநீர் இணைப்பு எண்ணையும் தெரிவித்துள்ளார்.

3) 17.2.2017 நாளிட்ட முறைமன்ற நடுவத்தின் அறிவிப்பாணை வாயிலாக மனுவில் தெரிவித்துள்ள 'ஒரே மாதிரியான சென்டேஜ் கட்டணம்" குறித்தும், பேரூராட்சி முன்னாள் தலைவி, செயல் அலுவலர், பிளம்பிங் ஒர்க்கர் குறித்தும் கூடுதல் விளக்கம் கோரப்பட்டது. 12.05.2017 நாளிட்ட செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில், மனுதாரரின் புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு ரூ.10,000/- என எந்த தொகையும் வசூலிக்கப்படவில்லை எனவும், பதிவுக் கட்டணம், ரூ.100/-, முன் வைப்புத் தொகை ரூ.3000/- மற்றும் குடிநீர் இணைப்பு வேலைக்கான மதிப்பீட்டில் 12.5 சதவீத தொகை மற்றும் கட்டணங்கள் சேர்த்து வரும் தொகை சென்டேஜ் கட்டணமாக வங்கி

வரைவோலைகள் மூலமாகவே பேரூராட்சியால் பெறப்பட்டு ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், தெருவை ஒட்டியுள்ள பெரும்பாலான வீடுகளுக்கு குறைந்தபட்ச தொகை ரூ.523/- வசூலிக்கப்படுகிறது எனவும் மீதமுள்ள இணைப்புகளுக்கு சாலை துண்டிப்பு கட்டணம் உள்ளிட்ட தொகைகளுடன் சென்டேஜ் கட்டணம் வசூலிக்கப்படுவதாக தெரிவித்து ஆதாரமாக 'Day Book Xerox' நகலினை செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார்.

4) குடிநீர் இணைப்பு விண்ணப்பதாரர்களால் இப்புகாரில் குறிப்பிட்டவாறான முன்னாள் தலைவர்கள், பணியாளர் மற்றும் பிளம்பர் மீது புகார் ஏதும் அளிக்கப்படவில்லை என்றும், விண்ணப்பத்தாரர்களால் நியமிக்கப்பட்டு மதிப்பீடு தயாரித்துள்ள பிளம்பர்கள் புகாரில் குறிப்பிட்டுள்ள காண்ட்ராக்டர் திரு. சுரேஷ் என்பவரது பெயர் இடம் பெறவில்லை என்றும் செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

5) முறையீட்டு மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 13.6.2016 நாளிட்ட அறிவிப்பாணை வாயிலாக முறையீட்டு மனுவினை உரிய படிவத்தில், நீதிமன்றவில்லை ஒட்டப்பட்டு சமர்ப்பித்திட தெரிவிக்கப்பட்டது. மேலும், 22.11.2016 நாளிட்ட அறிவிப்பாணை வாயிலாக 22.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகிடவும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி இரு அறிவிப்பாணைகளின்படி மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தின் முன் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் மனுவினையும் சமர்ப்பிக்கவில்லை, மேலும் விசாரணைக்கும் ஆஜராகவில்லை.

6) முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள், பேரூராட்சி செயல் அலுவலர் அளித்த அறிக்கைகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள குடிநீர் இணைப்புகள் வழங்கியது குறித்த புகார் மனு மீது பெறப்பட்ட செயல் அலுவலர் விளக்க அறிக்கை வாயிலாக, குடிநீர் இணைப்புக்கான பதிவுக் கட்டணம், ரூ.100/- முன்வைப்புத்தொகை ரூ.3000/- மற்றும் குடிநீர் இணைப்பு வேலைக்கான மதிப்பீட்டில் 12.5 சதவித தொகை மற்றும் கட்டணங்கள் சேர்த்து சென்டேஜ் கட்டணமாக வங்கி வரைவோலைகள் மூலமாக பேரூராட்சியால் பெறப்பட்டு ரசீதுகள் வழங்கப்படுவதாக அறியப்படுகிறது. மேலும் மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட காலத்தில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு மதிப்பீடு தயாரித்துள்ள பிளம்பர் திரு. சுரேஷ் என்பவர் பெயர் இல்லை என்பது செயல் அலுவலர் அறிக்கை வாயிலாக அறியப்படுகிறது.

மேலும், மனுதாரர் 13.6.2016 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை வாயிலாக முறையீட்டு மனுவாக உரிய படிவம் I-ல் அனுப்பக்கேட்டும், 22.12.2016 நாளிட்ட முறைமன்ற நடுவ அறிவிப்பாணை வாயிலாக விசாரணைக்கு அழைக்கப்பட்டும், மனுதாரரிடமிருந்து உரிய படிவ முறையீட்டு மனு சமர்ப்பிக்காத நிலையிலும், விசாரணைக்கும் மனுதாரர் ஆஜராகாத நிலையில் செயல் அலுவலரின் மேற்படி அறிக்கைகளை ஏற்று இவ்வழக்கினை முடித்து வைக்க இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7-ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.
19/6/17

பெறுநர்:
திரு. V. [illegible],
பேரூராட்சி துணைத் தலைவர்,
பம்மத்து முலை,
மணவாளக் குறிச்சி – 629 252.

பேரூராட்சி முன்னாள் தலைவர்,
மணவாளக்குறிச்சி பேரூராட்சி,
மணவாளக்குறிச்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.